கடைக் கட்டடங்கள் கட்டுவதற்கு தற்போது அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன். எங்கள் பகுதியிலே நான்கு பகுதி நேரக் கடைகளுக்கு அனுமதி வேண்டி நான் கோரிக்கை வைத்தது ஏற்கெனவே மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலே நிலுவையிலே இருக்கிறது. அதற்கும் உரிய ஆணைப் பிறப்பிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழிவகை செய்வார்களா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ.சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கருத்து ஏற்கக்கூடியதுதான். அதைப் பற்றி பரிசீலிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 93, மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

93—

உழவர் சந்தை

***772—மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்):**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சங்ககிரியில் உழவர் சந்தை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி (பேரவைத் துணைத் தலைவர்): கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் நிறைவேற்ற முன்வந்திருப்பதனால் அவர்களுக்கு நன்றி சொல்லி விடைபெறுகிறேன். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 94, திரு. செ. தாமோதரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

94—

குளிர்பதனக் கிடங்கு

***1958—திரு. செ. தாமோதரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS
வாய்மையே வெல்லும்